DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No.99/2024**

**Deposition of LW2 examined as PW1** Dt. 17.02.2026

| | |
|---|---|
| Name | ஜாகர்அலி |
| Father's/Husband's Name | அமீர்பாட்ஷா |
| Village | நீடூர் |
| Taluk | |
| Age | 64/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 17.02.2026

(Accused present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டில் இருந்து வருகிறேன். புகார்தாரர் முகமதஅலி எனது சித்தப்பா மகன் ஆவார். புகார்தாரர் முகமது அலி மலேசியாவிலேயே இறந்துவிட்டார். அவர் பிறந்தது முதல் மலேசியாவிலேயே குடும்பத்துடன் வசித்து வருகிறார். முகமதுஅலி நஸ்ருல்லாவுக்கு பவர் கொடுத்து சொத்துக்களை விற்பதற்காகவும், பார்த்து கொள்வதற்காகவும் 2009-ல் நியமித்து இருந்தார். 2009 முதல் 2012 வரை மேற்படி சொத்துக்களை பவர் ஏஜெண்டாக இருந்து பார்த்து கொண்டிருந்தார். மீண்டும் 2019-ல் மலேசியாவில் இருக்கும் முகமதுஅலியிடம் பவர் கேட்டார். ஆனால் அவர் அதற்கு வேண்டாம் நானே வந்து பார்த்து கொள்வேன் என்றார். ஆனால் நஸ்ருல்லா போலியாக பவர் ஆவணம் தயார் செய்து கங்கணாபுத்தூர் கிராம புல எண்.375-ல் உள்ள நஞ்சை நிலம் 156 குழியை அவரது மகளுக்கு கிரயம் செய்து கொடுத்தார். நஸ்ரூல்லா, ஹஜ்ஜிமுகமது என்பவருக்கு சில இடங்களை கிரயம் செய்து கொடுத்தார். ஹஜ்ஜிமுகமது இடங்களுக்கான தொகையை புகார்தாரருக்கு கொடுத்து பைசல் செய்துவிட்டார். அதன்பிறகு முகமது அலி ஊருக்கு வந்து மேற்படி ஆவணங்களை சரிபார்த்த போது சொத்துக்கள் விற்கப்பட்டது தெரியவந்தது. முகமதுஅலி, நஸ்ரூல்லா மற்றும் அவரது மகள் மீது புகார் கொடுத்தார். அது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

A. Jakabali

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

17/2/26

நீதித்துறை நடுவர் எண்-II

மயிலாடுதுறை